بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜும்ஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** *(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)*

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல், இலண்டன்**

January 24 2014

**தமிழாக்கம் : முஅல்லிம் M. நிஸாமுத்தீன் சாஹிப்**

# கூட்டுப் பொறுப்பும் முயற்சியும்

***தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:***

இன்றும் கடந்த குத்பாவின் கருத்தே தொடரும். முதலில் கூறப்பட்ட விஷயங்களின் மேலதிகமான கருத்துக்கள் அல்லது சிறந்த விளைவுகளைப் பெறுவதற்காக – முயற்சி செய்வதற்காக மேற்கொண்டு என்ன வழிகள் உள்ளன? ஜமாஅத்தின் பெரும் பகுதியில் சீர்திருத்தத்தை ஏற்படுத்த வழிகள் என்ன? அதுபற்றி இன்று கூறப்படும். கடந்த இரு குத்பாக்களில் விரிவாக கூறப்பட்டதன் காரணமாக ஒரு விஷயம் தெளிவாகி விட்டது. செயல் சீர்திருத்தத்திற்கான மூன்று அம்சங்கள் மனிதனிடம் உருவாகி விட்டால் செயல் சீர்திருத்தம் விரைவாகவும், மிகச் சிறந்த முறையிலும் ஏற்பட முடியும். அவற்றுள் முதலாவது, எண்ணத்தின் ஆற்றல் உருவாகுதல். அதாவது மார்க்க ரீதியில் பார்க்கும் போது ஈமானில் மேம்பாடு ஏற்படுத்துவதாகும். இரண்டாவது, அறிவின் பலவீனத்தை அகற்றுவது. மூன்றாவது, செயல் ஆற்றலின் பலவீனத்தை அகற்றுவது ஆகும்.

நான் கூறியது போன்று இது குறித்து இன்னும் அதிகம் கூறுவேன். அதனை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் விரிவாக விளக்கியுள்ளார்கள். ஆனால் இதுபற்றி இன்று கூறப்போகிற விஷயங்களைப் பற்றி ஒன்றை கூற விரும்புகிறேன். நமது முரப்பிகள், உலமாக்கள், பொறுப்பாளர்கள், அமீர்மார்கள் ஆகியோருக்கு போதனை செய்வதற்கு வாய்ப்பு கிடைக்கிறது. அந்தப் பொறுப்பாளர்களுள் கிளை அமைப்பின் பொறுப்பாளர்களும் அடங்குவர். குறிப்பாக, ஒரு விஷயத்தைக் கவனத்தில் வையுங்கள். ஜமாஅத் மக்களின் செயல் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் இவ்விஷயத்தின் மூலம் முழுமையாக தமது பங்கை அவர்கள் வழங்க முடியும். இதுபற்றி அவ்வப்போது நான் பல விஷயங்களைக் கூறி வருகிறேன்.

இப்போது M.T.A –வின் அருளால் மக்கள் எங்கே இருந்தாலும் தொடர்பு கொள்ளவும், எனது பேச்சைக் கேட்கவும் முடிகிறது. அல்லாஹ்வின் அருளால் அதற்கு தாக்கமும் ஏற்படுகிறது. குறைந்தபட்சம் கணிசமான பேர் தாக்கத்திற்கு ஆளாகின்றனர். ஆனால் முரப்பிகள், அமீர்கள், பொறுப்பாளர்களது பணியாவது, தமது நிகழ்ச்சிகளை அதற்கேற்ப வடிவமைத்தவாறு இந்தக் கருத்தினை மீண்டும் மீண்டும் மக்கள் முன் கொண்டு வர வேண்டும். அதன் மூலம் ஒவ்வொரு அஹ்மதியின் மனதிலும் இந்தக் கருத்து நன்றாகப் பதிய வேண்டும். எனவே இது மிக முக்கியமான விஷயமாகும். பொறுப்பாளர்கள் அனைவரும் இதனைக் கண்முன் நிறுத்தி செயல்பட வேண்டும்.

சீர்திருத்தத்தின் முதல் அம்சம் ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போன்று எண்ணத்தின் ஆற்றலை உறுதிப்படுத்துவதாகும். வேறு வார்த்தைகளில் கூறினால் அது ஈமான் ஆகும். அதனை உருவாக்குவதற்காக நபிமார்கள் உலகில் வருகின்றனர். அவர்கள் புத்தம் புதிய உயிருள்ள அற்புதங்களை நிகழ்த்திக் காட்டுகின்றனர்.

***ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:***

நமது ஜமாஅத்திடம் அல்லாஹ்வின் அருளால் புத்தம் புதிய அடையாளங்கள் எவ்வளவு அதிகம் எனில், அதேபோன்று ஏன் அதற்கு அருகில் வரும் அளவுக்குக் கூட வேறு எவரிடமும் இல்லை.

இஸ்லாத்திற்கு வெளியில் வேறு எந்த மதத்திடமும் இறைவனது புத்தம் புதிய வார்த்தைகளும், உயிருள்ள அற்புதங்களும், அவனது இருப்பைக் காட்டித் தரக்கூடிய அடையாளங்களும் இல்லை. அவை மனித உள்ளங்களை எல்லா வகையான அசுத்தங்களிலிருந்தும் தூய்மை ஆக்குகின்றன. மேலும் இறை ஞானத்தால் நிறைத்து விடுகின்றன. ஆனால் இந்த ஈமான்களும், உயிரூட்டமுள்ள அற்புதங்களும் இருந்தும், பிறகு ஏன் இந்த ஜமாஅத்தின் அமல்களில் பலவீனம் உள்ளது?

***அதுபற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தனது கருத்தை வெளியிட்டுள்ளார்கள்:***

காரணம் என்னவெனில், இந்த இயக்கத்தின் உலமாக்கள், சொற்பொழிவாளர்கள் இதனைப் பரப்புவதற்கு குறிப்பான கவனம் செலுத்தவில்லை.

இது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் கூற்றாகும். அது இன்றிலிருந்து **75–76** ஆண்டுகளுக்கு முன்னர் சரியாக இருந்தது போன்றே இன்றும் சரியாகவே உள்ளது. மேலும் அதன் பக்கம் கவனம் செலுத்தத் தேவையுள்ள விஷயமும் ஆகும். நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (ரலி) அவர்களின் காலத்தை விட்டு தூரம் செல்லச் செல்ல, நாம் முழுமையாக இது குறித்து திட்டமிட்டு கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது. ஆகவே அன்னாரின் கூற்று இன்றும் கவனம் செலுத்தத்தக்கதாகும். காரணம் என்ன? ஈஸா (அலை) மரணத்தைப் பற்றி சொற்பொழிவுகள் நிகழ்த்துகிறார்கள். அல்லது ஆட்சேபனை செய்பவர்களின் ஆட்சேபனைகளுக்கு எதிரில் ஆதாரங்களுக்கு மேல் ஆதாரங்களை பெரியவர்களின் கூற்றுகளிலிருந்து எடுத்துக் காட்டுகிறார்கள். அதன் மூலம் அவர்களின் வாயை அடைத்து விடுகிறார்கள். இதில் காட்டுகிற ஆர்வத்தை ஜமாஅத்தின் சரியான போதனையை நடைமுறைப்படுத்துவதில் காட்டுவதில்லை. குறைந்தபட்சம் உலமாக்களின் தரப்பிலாவது இல்லை. இதன் விளைவு என்னவெனில், நமது ஜமாஅத்தில் ஈஸா (அலை) மரணம் குறித்து ஆதாரங்களை அறிந்தவர்கள் உள்ளனர். மவ்லவிமார்களின் ஆட்சேபனைகளுக்கு அவர்களின் முகத்தை உடைக்கிற பதிலை அவர்களால் தர முடிகிறது. இங்கும் கூட பாருங்கள். சில சேனல்களில் அல்லது இன்டர்நெட்டில் மவ்லவிமார்கள் செய்கிற ஆட்சேபனைகளுக்கு சில நேரங்களில் மிக நல்ல அழகிய பதிலை ஒரு சாதாரண அஹ்மதி தந்து விடுகிறார். சிலர் அந்த டி.வி நிகழ்ச்சிகள் பற்றி நமக்கு ரிப்போர்ட் அனுப்புகிறார்கள். அதில் தாம் அங்கு அளித்த பதில்களையும் எழுதுகின்றனர். அவர்களின் பதில்கள் மிக நன்றாகவும் அறிவுப்பூர்வமாகவும் உள்ளன. எனவே இந்த விஷயங்களில் நமது ஆயுதங்கள் கூர்மையாகவே தான் உள்ளது. ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் அல்லாஹ்வை எந்தக் கோணத்தில் எடுத்து வைத்துள்ளார்கள் என்று தெரிந்தவர்கள் மிகக் குறைவாகவே இருப்பர். அன்னார் இறைநேசம், இறை ஞானம் ஆகியவற்றை உருவாக்க என்ன வழிகளைக் கூறினார்கள்? இறை நெருக்கத்தைப் பெற அன்னார் என்ன சொற்களில் கவனமூட்டியுள்ளார்கள்? இறைவனது புத்தம் புதிய வசனங்கள், அற்புதங்கள் எவ்வளவு மகிமையுடன் அவர்களிடம் இறங்கின? என்பதை அறிந்தோர் குறைவுதான்.

எனவே சில நேரங்களில் ஒரு மனிதர் ஈஸா (அலை) அவர்களின் மரணத்தை ஏற்றுக் கொள்கிறார். அதன் சான்றுகளையும் கூட அறிகிறார். பெற்றோரிடமிருந்து வம்சாவழியாக அவர்களுக்கு அஹ்மதிய்யத்தும் கிடைத்துள்ளது. ஆனால் இவற்றையெல்லாம் தெரிந்திருந்தும் கூட மற்றொருபுறம் அல்லாஹ் பற்றிய ஞானம் அல்லது இறைவனின் புத்தம்புதிய வார்த்தைகள், அடையாளங்கள் அல்லது இறை நெருக்கம் பெறும் வழிகள் ஆகியவை தெரியாததால் செயல் பலவீனம் ஏற்பட்டு விடுகிறது. ஈமானுமே தடுமாறத் தொடங்குகிறது. மேலும் செயல் பலவீனமும் உருவாகிறது. ஆகவே நிச்சயமாக வஃபாத்தே மஸீஹ் பற்றி ஒரு மனிதர் நல்ல கெட்டிக்காரராக இருக்கிறார். ஆனால் அந்த மார்க்க அறிவைப் புரிந்ததனால் மட்டும் ஒருவரின் செயல் சீர்திருத்தம் பெற்று விடாது. இந்தக் கோணத்தில் ஜமாஅத்தில் சில பலவீனங்கள் உருவாகி விடுகின்றன. ஜமாஅத்தின் உலமாக்கள், முரப்பிகள் மற்றும் எல்லாப் பொறுப்பாளர்கள் ஆகிய இவர்கள் தமது முன்மாதிரியை ஜமாஅத்தின் முன் வைப்பதும், அவர்களின் பொறுப்பும், சீர்திருத்தப் பணியும் ஆகும். இவற்றை கவனம் செலுத்த வேண்டிய அளவுக்கு அவர்கள் கவனம் செலுத்தாதவரை, ஜமாஅத்தின் ஒவ்வொரு தனிநபரையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தோன்றிய நோக்கத்துடன் இணைப்பதற்கு முயற்சி செய்யாத வரை – அதுவும் தேவையான அளவுக்கு முயற்சி செய்யாத வரை ஜமாஅத்தின் அந்த அங்கம் எண்ணத்தின் ஆற்றலின் பலவீனத்தின் காரணமாக செயல் சீர்திருத்தம் பெற முடியாமல்தான் போகும். பிறகு ஜமாஅத்தில் அத்தகையோர் அதிகம் காணப்படத் தொடங்குவர். நாம் இதனை அறிவது அவசியமாகும். ஆய்வு செய்வது அவசியமாகும்.

நம்மில் எத்தனை பேரிடம் அல்லாஹ்வுக்கு இபாதத் செய்வதில் உண்மையாகவே ஆர்வம் உள்ளது என்று பாருங்கள்! ரமலானில் ஒரு மாதமல்ல அல்லது ஒரேயொரு முறை இஃதிகாஃப் இருந்து விட்டு பிறகு வருடம் முழுவதும் அல்லது பல வருடங்கள் அதை சொல்லிக் கொண்டிருக்காமல் நிரந்தரமாக உறுதிப்பாட்டுடன் இறைவனது நெருக்கம் நிரந்தரமாக கிடைப்பதற்கு நம்மில் எத்தனை பேர் முயற்சி செய்கிறோம்? அதனால் எத்தனை பேரிடம் இறைவன் தனது அன்பு பரிமாற்றத்தின் அடையாளத்தைக் காட்டுகின்றான்; அவரிடம்பேசுகிறான்?

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக்கொண்டு இந்த தகுதியை அடைவது அல்லது அடைய முயற்சி செய்வது ஒவ்வொரு அஹ்மதி மீதும் கடமையாகும். ஆகவே இதுவே புரட்சியாகும். இந்த இஸ்லாத்தின் மறுமலர்ச்சியை உருவாக்கவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்தார்கள். யதார்த்தத்தில், ஹஸ்ரத்

மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தகுதி ஒவ்வொருவருக்கும் புரிய வேண்டும். அன்னாரது தோற்றத்தின் நோக்கத்தை நிறைவேற்ற ஒவ்வொருவருக்கும் துடிப்பு வேண்டும். அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கையில் எத்தனை மகத்தான அடையாளங்களைக் காட்டினான் என்று நமக்கு தெரிந்தால் – அவர்களை ஏற்றுக் கொண்டவர்களுக்கு எண்ணற்ற அடையாளங்களைக் காட்டினான் என்று நமக்கு தெரிந்தால் – அவர்களை ஏற்றுக் கொண்டவர்களுக்கு எண்ணற்ற அடையாளங்களை வழங்கினான் என்று தெரிந்தால், நம்மில் ஒவ்வொருவரும் அந்த அந்தஸ்தைப் பெற விரும்பியிருப்போம். அதற்காக முயற்சி செய்திருப்போம். அங்கும் நேரடியாக அடையாளங்கள் தென்பட்டிருக்கும். பிறகு ஈமானிய ஆற்றலில் பிரகாசம் பிறந்திருக்கும். அதன் மூலம் எத்தகைய எண்ணத்தின் ஆற்றல் உருவாகியிருக்கும் என்றால், அதனால் இறை நெருக்கத்தைப் பெறுவதற்கு ஒரு சிறப்பான ஆர்வம் உருவாகி விடும்.

ஆக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அடையாளங்களின் வெளிப்பாட்டினை இக்காலத்தில் இன்றுவரை அல்லாஹ் நடத்திக் கொண்டுதான் இருக்கிறான். இந்த அடையாளங்கள் நமது உள்ளத்தில் ஒரு விதையை ஊன்ற வேண்டும். அதன் மூலம், நாமும் இறை நெருக்கத்தைப் பெற்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) மற்றும் அன்னாரின் எஜமானர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுடைய பரக்கத்தினால் அவர்களின் ஒவ்வொரு முன்மாதிரியையும் நம்மிடம் உள்வாங்கிக் கொண்டு அல்லாஹ்வின் அருளால், இறைவன் நம்மிடம் பிரத்யேகமாக நடந்து கொள்ளத்தக்க அந்தஸ்தை அடைய வேண்டும். நாம் உலக விஷயங்களில் பிறரைக் காப்பி அடிக்கிறோம். ஒருவரது நல்ல பொருட்களைப் பார்த்து ஆசைப்படுகிறோம். அதற்காக முயற்சி செய்கிறோம். அதனைப் பெற பல வழிகளைப் பயன்படுத்துகிறோம். இவ்விஷயத்தில் ஒவ்வொருவரும் தமது சிந்தனைக்கேற்ப அமல் செய்ய அல்லது காப்பி அடிக்க முயற்சி செய்கின்றனர்.

ஒருவர், மற்றவர் அழகான ஆடை அணிந்திருப்பதைப் பார்க்கிறார் அல்லது சூட் அணிந்து இருக்கக் காண்கிறார் எனில், தமக்கும் அது வேண்டும் என்று விரும்புகிறார் அல்லது இன்னும் வேறு ஒரு பொருளைப் பார்த்தால் அதன்மீது ஆசை உருவாகிறது. இப்போது டி.வி, உலகை மிக அருகில் கொண்டு வந்து விட்டது. நடுத்தர வர்க்கம் போகட்டும். ஏழைகள் கூட என்னிடம் இன்ன பொருள் இருக்க வேண்டும்; இன்ன பொருள் இருக்க வேண்டும் என்று நினைக்கிறார். நம்மிடம் டி.வி. இருக்க வேண்டும். என்னிடம் ஃபிரிட்ஜ் இருக்க வேண்டும். ஏனெனில் அது இன்னாரிடம் உள்ளது. அவரும் என்னைப் போன்றவர் தான். அந்த இன்னொருவருக்கு அல்லது ஸைதுக்கு ஏதாவது ஒருவர் அன்பளிப்பாகக் கூட தந்திருக்கலாம். நான் அதில் பேராசைப்படக்கூடாது என்று நினைப்பதில்லை. உடனே அதனை வாங்க முயற்சி செய்யப்படுகிறது. ஏனெனில் ஸைதிடம் உள்ளது என்னிடமும் இருக்க வேண்டும். பிறகு கடன்வாங்க முயற்சி செய்யப்படுகிறது. சிலருக்கு இதற்காக உதவித்தொகை கேட்டு விண்ணப்பிக்கும் வழக்கமும் உள்ளது. கண்டிப்பாக ஜமாஅத், தனது வசதி வாய்ப்பிற்கேற்ப தேவை உள்ளவருக்கு தேவையை நிறைவேற்றுவது ஜமாஅத்தின் கடமைதான். ஆனால் விண்ணப்பம் தருபவர் – பாகிஸ்தான், இந்தியா அல்லது குறிப்பாக ஏழை நாடுகளைச் சேர்ந்தவர் தனது அனுமதிக்கப்பட்ட தேவைக்காக விண்ணப்பிக்க வேண்டும். தமது சுய கண்ணியத்தையும், கருத்தில் கொள்ள வேண்டும். ஓரளவுக்கு வசதியுள்ளவர்கள் கூட ஒருவரையொருவர் பார்த்து காப்பி அடிக்கின்றனர். புதிய சோபாவைப் பார்த்தால் தானும் அதுபோன்று வாங்க வேண்டும் என்று ஆசை வருகிறது. மாடலான டி.வி.யைப் பார்த்தால் அதனை வாங்க ஆசை வருகிறது. அதுபோன்று மற்ற மின்சாதனப் பொருட்கள், எலக்ட்ரானிக் பொருட்கள் வாங்க ஆசை வருகிறது. கடனுக்கு கார் வாங்குகின்றனர். இங்கு இன்னொன்றும் கூறுவேன். தற்கால மோசமான பொருளாதாரச் சூழலில் இதுபோன்ற பொருட்களை வாங்குவதற்காக வங்கிகளில் வட்டிக்குக் கடன் வாங்கப்படுகிறது. வட்டி சாபமாகும். இது அவர்களை எங்கு வரை கொண்டு செல்லும் என்பதை அவர்கள் சிந்திப்பதில்லை. எவ்வாறிருப்பினும், இந்த வட்டிக்கடன் அவர்களை திவாலாக்கி விடுகிறது.

இப்போது மக்கள் ஒருவரைப் பார்த்து ஒருவர் காப்பி அடிப்பது குறித்து கூறி வந்தேன். உலகியல் விஷயங்களில் மக்கள் ஒருவரைப் பார்த்து ஒருவர் காப்பி அடிக்கின்றனர். அதனைப் பெறுவதற்காக தமது சுய கண்ணியத்தை இழந்து விடுகின்றனர் அல்லது திவாலாகி நொடிந்து போய் தமது சொத்தைக் கை நழுவ விடுகின்றனர். அதாவது உலக விஷயங்களில் காப்பி அடிப்பதால் பயன் குறைவு; நஷ்டம் அதிகம். ஆனால் மார்க்க விஷயத்தில் காப்பி அடித்தல், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் காட்டிய முன்மாதிரியின்படி ஆவதற்கு முயற்சி செய்வது சிறந்ததாகும். இன்னும் சொல்வதாயின், நம்மில் பலர் இறை நெருக்கத்தைப் பெற்ற சஹாபாக்களையும் கூட பார்த்துள்ளனர். அவர்களை நாம் காப்பி அடிக்க முயற்சிப்பதில்லை. இங்கு நஷ்டம் என்ற கேள்விக்கே இடமில்லை. பலன் மட்டுமே உள்ளது. பலனும் கூட எத்தகையது எனில், வேறு எந்த இடத்திலும் அதனைப் போன்று பெற முடியாது. அதுதான் நன்மைகளில் மேம்படுத்தக் கூடிய காப்பி அடித்தலாகும். இந்த விஷயங்களை நாம் காப்பி அடிக்காததற்கு என்ன

காரணம்? தெளிவாக தெரிவதாவது, ஒன்று நாம், இந்த விஷயங்களைப் பற்றி முற்றிலும் அறியவில்லை. இதனால் நமக்கு அந்த உணர்வே ஏற்படாமல் போய் விட்டது அல்லது இவ்வளவு நீண்ட காலத்திற்குப் பிறகு கூட தனது புத்தம்புதிய அடையாளங்களை இன்றும் கூட அல்லாஹ் வழங்குகிறான் என்பதைப் பற்றி மிகக் குறைந்த அறிவே உள்ளது. விளைவு அந்த கவனம் இல்லாமைக்குச் சமமாக ஆகி விட்டது.

உலகியல் விஷயங்களை நாம் டி.வி.யிலும், செய்தித்தாளிலும் போகும்போதும், வரும்போதும் பத்து முறை விளம்பரங்களில் பார்த்தும் விடுகிறோம். விஷயம் மூளையில் அமர்ந்து விடுகிறது. நான் இந்தப் பொருளை எப்படியாவது வாங்கிவிட வேண்டும்! உங்களுக்கு இந்தப் பொருள் எதற்கு தேவை? என்று சிலரிடம் நாம் புரிய வைத்தால் அவர்களிடமிருந்து உடனே இவ்வாறு பதில் வருகிறது. ஏழைகளுக்கு ஆசை இருக்காதா? எங்களுக்கும் ஆசைகள் இருக்காதா? எங்கள் பிள்ளைகளுக்கு ஆசை இருக்காதா? எங்களிடமும் இந்தப் பொருள் இருக்க வேண்டும் என்று ஆசை இருக்காதா? ஆனால் இந்த ஆசைகளெல்லாம் இல்ஹாம் பற்றி கேள்விப்படும் போது நம்மிடம், இறைவன் பேச வேண்டுமே? நமக்காகவும் இறைவன் அடையாளங்களைக் காட்ட வேண்டுமே? தனது அன்பை நம்மீது வழங்க வேண்டுமே என்று தோன்றாததற்குக் காரணம் நமது உலமா, நமது முரப்பிகள், பொறுப்பாளர்கள், தத்தமது வட்டத்தில் இறை நேசத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்வதற்காக ஜமாஅத் அன்பர்களிடம் மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறவில்லை அல்லது எவ்வளவு செய்ய வேண்டுமோ அவ்வளவு செய்யவில்லை அல்லது அவர்களது கவனம் திரும்பும் அளவுக்கு முன்மாதிரியைக் காட்டவில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) மற்றும் அன்னாரது சஹாபாக்களைப் பற்றி, மீண்டும் மீண்டும் குறிப்பிட்டு இறை உதவிகள் அந்தப் பெரியோர்களுக்கு எவ்வாறு கிடைத்தது? என்று அழுத்தமாக சொல்லப்படவில்லை; உறுதியை உருவாக்கவில்லை; அல்லாஹ்வுடைய பண்புகளுக்கென்று குறிப்பிட்ட காலமோ, நேரமோ, குறிப்பிட்ட நபரோ மட்டும் இலக்கு ஆக்கப்படவில்லை என்ற உறுதியை உருவாக்கவில்லை. மாறாக அல்லாஹ் இன்றும் தனது பண்புகளை வெளிப்படுத்துகிறான் என்று மீண்டும் மீண்டும் குறிப்பிடப்பட்டு, அந்த தொடர்பை ஏற்படுத்தும் வழிமுறைகளையும் கூறி வந்திருந்தால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அல்லாஹ் கொடுத்த வாக்குறுதிகளைக் கூறப்பட்டிருந்தால் இந்த சிறுவர்கள், இளைஞர்களிடம் நமது துஆ ஏன் ஒப்புக் கொள்ளப்படவில்லை என்ற எண்ணம் உருவாகி இருக்காது.

எனவே அல்லாஹ்வுடைய தொடர்பை உறுதிப்படுத்துவது அவசியமாகும். பிறகு துஆ ஒப்புக் கொள்ளப்படுவதின் தத்துவம் புரிய வரும். அடையாளங்களும் வெளிப்படுகின்றன. ஆகவே இதனை பொதுவாக எடுத்துரைக்க வேண்டும். இக்காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உண்மை அடியாருடன் இணைவதன் மூலம் அல்லாஹ்வுடைய நெருக்கத்தைப் பெற முடியும். அடையாளங்கள் நபி (ஸல்) அவர்களின் காலத்திற்கு மட்டுமோ அல்லது அவர்களுடன் மட்டும் தொடர்புடையதோ குறிப்பாக்கப்பட்டதோ அல்ல. மாறாக, இப்போது கூட அல்லாஹ் தனது எல்லா வல்லமைகளுடன் தனது பேரொளியைக் காட்டுகிறான். எனவே நன்மைகளைப் பெறும் துடிப்பு, அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறும் துடிப்பு நமது ஜமாஅத்தில் சகஜமாகி விட்டால் ஜமாஅத்தின் பெரும் பகுதி பாவத்தை அழித்து விடும. பாவத்தை முழுமையாக ஒழிப்பது சிரமமாகும். அதனை நாம் வாதம் செய்ய முடியாது. ஆனால் பெருமளவில் பாவத்திலிருந்து நம்மால் வெற்றி பெற்று விட முடியும் அல்லது ஜமாஅத்தின் பெரும் பகுதியினர் பாவத்தின் மீது வெற்றி பெற்றவர்களைச் சேர்ந்தவர்களாகி விடுவர்.

ஆகவே நமது முரப்பிகள், அமீர்கள், பொறுப்பாளர்கள் தத்தமது வட்டத்தில் சீர்திருத்தம் செய்ய முயற்சி செய்ய வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் இறைவன் கூறியுள்ளான். அன்னாரை முழுமையாகப் பின்பற்றுபவர் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவார்கள் என்ற விஷயத்தைக் கூறி சீர்திருத்தம் செய்ய முயற்சி செய்ய வேண்டும். அத்தகையோரின் பெரும்பாலான துஆக்களை அல்லாஹ் கேட்கிறான். அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தில் அத்தகையோர் உள்ளனர். என்னிடம் எழுதவும் செய்கின்றனர். அத்தகைய மக்களின் பல சம்பவங்களை நாம் பல்வேறு நேரங்களில் கூறவும் செய்கிறோம். அத்தகைய சம்பவங்களைக் கேட்டுத்தான், தம்மிடம் அந்நிலை உருவாவதற்காக காப்பி அடிக்க வேண்டும். அதன் மூலம் இறைவனுடன் நெருக்கமான உறவு நிலைபெறும்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:***

உலகில் என்னென்ன சமுதாயங்கள் உள்ளனவோ அவற்றில் எந்த சமுதாயமும் பதில் தரக்கூடிய இறைவனை அல்லது துஆக்களைக் கேட்கின்ற இறைவனை நம்பவில்லை. ஈஸாவை இறைவனாக நம்புகின்ற கிறித்தவர்கள் அவர் தமது துஆக்களைக் கேட்கிறார். பதிலும் தருகிறார் என்று கூற முடியுமா? ஒருபோதும் இல்லை. பேசக்கூடிய இறைவன்

ஒருவன் தான். அது இஸ்லாத்தின் இறைவனே ஆவான். அத்தகைய இறைவனை குர்ஆனே எடுத்து வைத்துள்ளது. அவனே கூறுகிறான்: ادْعُونِي أَسْتَجِبْ لَكُمْ *நீங்கள் என்னை அழையுங்கள். நான் உங்களுக்குப் பதிலளிப்பேன் (40:61)* இது முற்றிலும் சரியான கூற்றாகும். குறிப்பிட்ட காலம் வரை உண்மையான எண்ணம், தூய உள்ளத்துடன் அல்லாஹ் மீது ஈமான் கொண்டும் முயற்சி செய்து கொண்டும் துஆவில் மூழ்கி இருந்து கொண்டும் இருந்தால் இறுதியில் கண்டிப்பாக அவருக்கு பதில் தரப்படும். இவ்விஷயங்களை எல்லாம் ஜமாஅத்தின் முன் மீண்டும் மீண்டும் எடுத்து வைத்து வந்தால் நிச்சயமாக அதில் ஆற்றல் ஏற்படும். ஜமாஅத்தின் பெரும் பகுதியினர் மீது வலு ஏற்படும். அவர்களின் எண்ண ஆற்றல் உறுதியாகலாம். அதுவும் ஆயிரம் பாவங்களின் மீது வெற்றி கொள்ளும் அளவுக்கு அவர்கள் நிரந்தரமாக பாதுகாக்கப்படும் அளவுக்கு உறுதியாகலாம். அல்லாஹ்வுடன் அத்தகைய தொடர்பு உருவாகி விட்டால் பின்னர் அது ஒருபோதும் அசையப் போவதில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது தோற்றத்தின் நோக்கம் இதுதான். அதாவது மனித குலத்தைப் பாவத்திலிருந்து தப்பிக்கச் செய்தலும், அல்லாஹ்வுடன் ஒரு தொடர்பு – அவனது திருப்தியே எல்லாவற்றிலும் முதன்மையாகி விடும் அளவுக்கு தொடர்பு ஏற்படுத்துவதும் ஆகும். இபாதத்திலிருந்து தப்பிக்க சாக்குப் போக்குகளைத் தேடுவதற்குப் பதில், அவசர அவசரமாக அதனை செய்வதற்குப் பதில், தலை மேலுள்ள சுமையை அவசர அவசரமாக இறக்கி வைப்பது போன்று கடமையைச் செய்து முடிக்காமல் ஓர் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். இதுவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வருகையின் நோக்கமாகும்.

இதற்கான சில உதாரணங்களை எடுத்து வைக்கிறேன். அஹ்மதிய்யத் என்ன மாற்றத்தை இந்த மக்களிடம் உருவாக்கியது? கிர்கிஸ்தானைச் நமது முபல்லிக் சாஹிப் எழுதுகிறார்:

ஒரு மூத்த அஹ்மதி கண்ணியத்திற்குரிய உமர் சாஹிப். இவர் 10 ஜூன் 2002 –ல் பைஅத் செய்தார். 58 வயது. பிறப்பு முஸ்லிமாக இருந்தார். ஆனால் கம்யூனிசக் கொள்கையின் ஆதரவாளராக இருந்தார். பைஅத் குறித்து தனது உணர்வுகளை வார்த்தைகளில் இவ்வாறு வெளிப்படுத்துகிறார். இந்த எளியவனின் பைஅத்திற்காக கடிதம் எழுதிய நாள், உண்மையில் எனது வாழ்வின் நினைவில் நிற்கத்தக்க நாளாகும். அந்நாளை எனது புதிய பிறப்பாக எண்ணுகிறேன். அதன் அடிப்படைக் காரணம் என்னவெனில், அதற்கு முன் நான் எல்லா மார்க்கப் பிரிவுகளிடமும் சென்றுள்ளேன். அவற்றினால் வாழ்வில் எந்த முக்கிய சம்பவங்களும் ஏற்படவில்லை. ஆனால் நான் இங்கு பைஅத் செய்த பிறகு உண்மையான ஆன்மீகப் புரட்சி என்னிடம் ஏற்பட்டது. அதற்கு முன்பு என்னிடம் தொழுகை என்பது முற்றிலும் அன்னியமான ஒன்றாக இருந்தது. இன்று நிலை என்னவெனில், ஐவேளை தொழுகை எனது வாழ்வில் கட்டாயப் பகுதியாகி விட்டது. தஹஜ்ஜுத் தொழுகையை விட்டு விடுவது என்னைப் பொருத்தவரையில் இயலாத காரியமாகி விட்டது. எனது உள்ளம் இந்த உறுதியால் நிறைந்துள்ளது. அதாவது மனிதன் உண்மையைத் தேடிப் போகும் போது கண்டிப்பாக அவன் இலக்கை அடையவே செய்வான். அந்த இலக்கை அடைந்த பிறகே மனிதனுக்கு உண்மையான ஆன்மீகப் பயிற்சி ஏற்படுகிறது. அந்த நேரமே உண்மையில் மனிதனின் உள்ளம் அமைதி கொள்ளும் நேரமாக இருக்கிறது. புரட்சிகள் மனிதனிடம் உருவாகின்றன. அதுவும் புதிதாக வந்தவர்களிடம் உருவாகின்றன.

***பிறகு ஆப்பிரிக்காவைச் சேர்ந்த நமது மிஷனரி குதுனோல் எழுதுகிறார்:***

இத்ரிஸோ சாஹிப் இராணுவத்தில் லெப்டினென்ட் போஸ்டில் இருக்கிறார். 2013 –ல் பைஅத் செய்தார். அவர் தாம் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டதைப் பற்றி கூறுகிறார். எனது பிறப்பு முஸ்லிம்களின் ஈது பெருநாள் அன்று நிகழ்ந்தது. எனது இணை வைக்கும் தந்தை பெரியம்மாவிடம் கூறினார். இவனுக்கு முஸ்லிம் பெயர் வைக்க வேண்டும். ஆப்பிரிக்காவின் வழக்கமாவது ஒருவர் எந்த நாளில் பிறந்தாரோ அந்த நாளைப் பொறுத்து பெயர் வைக்கப்படும். அல்லது அதன் சிறப்புத் தன்மைகளைக் கவனத்தில் கொண்டு பெயர் வைத்து விடுவார்கள். எவ்வாறிருப்பினும், இவர் பெருநாள் அன்று பிறந்தார். தந்தை இணை வைப்பவர். ஆனால் முஸ்லிம்களின் ஈது நாள் ஆனதால் இவரை முஸ்லிமாக்கி விட வேண்டும். இந்த வகையில் சிறு வயதில் பள்ளிவாசல்கள் பக்கம் திரும்பியதுண்டு. ஒருநாள் ஜுமுஆ தொழுகை தொழுது விட்டு திரும்பும்போது அடிபட்டு காயம் ஏற்பட்டு விட்டது. இறைவனது இபாதத்தைச் செய்த பிறகு இந்த தடுமாற்றம் நடந்து விட்டதே! நானோ இறைவனை தொழுது விட்டு வருகிறேன். இருந்தும் கீழே விழுந்து அடியும் படுகிறதே? ஏன் அடிபட வேண்டும்? இபாதத் செய்த பிறகு தடுமாறி விழுந்தால் பிறகு இபாதத் செய்ததில் என்ன பயன்? என்று எண்ணி இஸ்லாத்தை விட்டு விட்டு நான் கிறித்தவனாகி விட்டேன். கூறுகிறார்: நான் சிலவேளை சர்ச்சிற்குப் போவேன். இன்னொரு நாள் இன்னொரு சர்ச்சிற்குப் போவேன்.

கிறித்தவத்திலும் பல பிரிவுகளுக்கு மாறிக் கொண்டே இருந்தார்.

கூறுகிறார்: பிரச்சனைகள் இன்னும் அதிகமாயின. மனைவியிடமும் சண்டை. எனது அமைதி போய் விட்டது. பிரச்சனைகளால் விழுந்து கொண்டே இருந்தேன். எனது வீட்டுப் பெரியவர்கள் குடும்பப் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்க முயன்றனர். பல கூட்டங்கள் நடந்தன. பஞ்சாயத்துகள் நடந்தன. ஆனால் அனைத்தும் பயனற்றுப் போயின. இந்நிலையில் ஜமாஅத்தின் ஒரு தாயி இலல்லாஹ் முஹம்மது சாஹிப் அவர்களைச் சந்தித்தேன். கூறுகிறார்: என்னைப் பற்றி அவருக்கு தெரிய வந்துள்ளது. நான் எல்லா சிகிச்சை முறைகளையும் சோதித்துப் பார்த்து விட்டேன். முஸ்லிமானேன்; கிறித்தவனானேன். பிரச்சனைகள் பெருகின. பிரச்சனைகள் தீரவில்லை. வீட்டிலுள்ளோர் புரிய வைக்க முயன்றனர். பஞ்சாயத்துகள் நடந்தது. ஒன்றும் பயன்படவில்லை. இப்போது தீர்வு நான் சொல்கிறேன். இதனை சோதித்துப் பாரும். என்ன விளைவு ஏற்படுகிறது என்று பாரும். துஆ செய்யுங்கள். எமது மார்க்கத்தின் உண்மைக்கு அடையாளமாவது அதனை ஏற்றுக் கொண்டவர்களின் துஆ ஒப்புக் கொள்ளப்படுகிறது. நீரும் உமக்காக துஆ செய்யுங்கள். நானும் உமக்காக துஆ செய்கிறேன். அல்லாஹ் உமக்கும் உமது மனைவிக்கும் இடையில் நல்றுலவை நிலைநாட்டுவானாக! அது நடந்து விட்டால், நாம் உம்மை துஆ செய்யக் கூறினால் நீர் தூய உள்ளத்துடன் துஆ செய்ய வேண்டும். நானும் உமக்காக துஆ செய்வேன். நான் இதனைக் கூறக் காரணம் உமது பிரச்சனைகள் தீர்ந்து விட்டால் நினைவில் கொள்ளுங்கள். அது எங்கள் இமாமின் உண்மைக்கு அடையாளமாகும்.

இவ்வாறு பல நாட்கள் துஆ செய்தார். அதனால் எனது பிரச்சனைகள் ஒவ்வொன்றாக தீர்ந்தன. மனைவியுடனும் சமாதானம் ஏற்பட்டு விட்டது. எனவே இதுவே அசல் வழியாகும். இதன் மூலமே துஆ ஏற்றுக் கொள்ளப்படுகிறது. என் வாழ்வே தலைகீழாக மாறி விட்டது. இவை அனைத்தும் காலத்தின் இமாமாகிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உண்மையின் அடையாளமாகும். அவர்களை ஒப்புக் கொள்வதில் தான் இரட்சிப்பு உள்ளது. இதில், வீடுகளில் அமைதியின்மை காணப்படுகின்ற பழைய அஹ்மதி குடும்பத்துடன் சேர்ந்தவர்களாக தம்மை காட்டிக் கொண்டு இருக்கின்ற நீண்ட கால அஹ்மதிகளுக்கு ஒரு பாடம் உள்ளது. சில வீடுகள் நிம்மதியின்மையால் நிறைந்துள்ளன. கணவன் மனைவியின் உரிமையை வழங்குவதில்லை. மனைவி கணவனின் உரிமையை வழங்குவதில்லை. ஈமானில் உறுதியுடன் செயல் சீர்திருத்தத்திற்கான முயற்சி செய்யுங்கள். பிறகு இந்த வீட்டுப் பிரச்சனைகள் தானாகவே தீர்ந்து விடும்.

ஒவ்வொருவரும் சோதித்துப் பார்க்க வேண்டும். உங்களின் 'நான்' என்ற அகம்பாவம் தவிர, உங்கள் உள்ளத்தில் புரையோடிப்போய் உள்ள எண்ணங்களான 'இன்னார் இப்படி கூறி விட்டார்', 'இவரிடம் நான் இவ்வாறு கூற வேண்டும்' என்பதையெல்லாம் விட்டு விட்டு மாசற்ற உள்ளத்துடன் இறைவனிடம் உதவி தேட வேண்டும். அப்போது இறைவன் சரியான வழியைக் காட்டுவான். பிறகு அல்லாஹ்வின் ஆதரவுகளின் அடையாளத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது பரக்கத்தால் இக்காலத்திலும் கூட அல்லாஹ் காட்டுவான். இதுபற்றியும் நான் கூற விரும்புகிறேன்.

கானாவின் டெக்கிமன் பகுதியின் சர்க்கில் முஅல்லிம் கோராபோரா என்பது அவரது ஊர். அங்கு ஒரு புதிய அஹ்மதி ஜிப்ரிலா சாஹிப் என்னிடம் வந்தார். அவர் கூறினார்: இது சேனைக்கிழங்கின் விளைச்சல் பருவமாகும். எனது சிலை வணங்கியான முஸ்லிம் அல்லாத தந்தை என்னை சிலைகளுக்கு முன் சென்று காணிக்கை செலுத்தி வருமாறு கூறினார். அதன் மூலம் நல்ல விளைச்சல் கிடைக்கும். அக்கிழங்கை உண்கின்றனர். இங்கும் அப்பொருள் கிடைக்கிறது. அந்த விளைச்சல் நன்றாக வருவதற்காக அங்கு சென்றால் நடக்கும் என்றார்.

முஅல்லிம் எழுதுகிறார்: அந்த சிலைகளையும் உமது தந்தையையும் விட்டு விடும் என்று கூறி அவருக்கு துஆ இஸ்திகாரா கற்பித்தேன். இறை அருளால் அறுவடையின் நாள் வந்த போது அந்த இளைஞரின் விளைச்சல் மிக நன்றாக இருந்தது. அவரது தந்தையின் விளைச்சலுடன் ஒப்பிடும் போது விளைச்சல் தரமாகவும் அதிகமாகவும் இருந்தது. தந்தை இணை வைப்பவராக இருந்தும் நேர்மையானவர் ஆவார். இந்த அடையாளத்தைப் பார்த்து தந்தை, எனது மகனின் இறைவனே உண்மையான இறைவன் என்று கூறி, தன்னிடம் இருந்த சிலைகளை எரித்து விட்டார். இதுவே ஈமானின் உறுதியாகும். இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட ஒரு புதிய அஹ்மதியிடம் கூட ஏற்பட்டு விடுகிறது.

### *பிறகு கென்யாவின் எல்டோரெட்டைச் சேர்ந்த நமது முபல்லிக் எழுதுகிறார்:*

அங்கு அஹ்மதிய்யத்தின் எதிரி ஒருவர் பள்ளிவாசலின் வளாகத்தில் இருந்த அலுவலகத்தில் எப்படியோ நுழைந்து விட்டார். அவர் அதற்கு முன்பு அங்கு வேலை பார்த்தார். அங்கு வந்து போய்க் கொண்டிருந்தார். பிறகு சிறிது கோபம் ஏற்பட்டு விட்டது. வேலை நீக்கம் செய்யப்பட்டார். அங்கு நுழைந்து கூரையில் சில தடை செய்யப்பட்ட பொருள்களான போதைப் பொருட்களை வைத்து விட்டு காவல்துறைக்கு ரிப்போர்ட் கொடுத்து விட்டார். இங்கு

அஹ்மதி முபல்லிக் வாழ்கிறார். இஸ்லாத்தின் தப்லீக் செய்தல் என்பதெல்லாம் வெறும் சாக்கு ஆகும். உண்மையில் அவர் டிரக்ஸ் விற்கிறார் என்று எழுதி விட்டார். உடனே காவல்துறையினர் நடவடிக்கை எடுத்து கட்டிடத்திற்கு சீல் வைத்தது. அவர் காட்டிய இடத்திலிருந்து மருந்து எடுக்கப்பட்டது. எவ்வாறிருப்பினும் காவல்துறைக்கு எல்லாம் எடுத்துக் கூறப்பட்டது. எதிரிகளின் விஷமம் என்று விளக்கப்பட்டது. ஆனால் போலீஸ் எதையும் கேட்கவில்லை. நாம் நடவடிக்கை எடுப்போம் என்று கூறி விட்டது. நமது மிஷனரியை காவல் நிலையத்திற்கு எடுத்துச் சென்று விட்டது. நீதிமன்றம் அடைக்கப்பட்டு விட்டது. மறுநாள் கேஸ் எடுக்கப்பட்டது. நீதிபதி வழக்கு விசாரணையை மற்றொரு நாளுக்கு ஒத்தி வைத்தார். எனக்கும் தகவல் வந்தது. நானும் பதில் எழுதினேன். பிறகு மீண்டும் வழக்கு எடுக்கப்பட்டது.

கூறுகிறார்: நான் நீதிபதிக்கு முன்பாக சென்ற போது, நீதிபதி என்னை ஆழமாகப் பார்த்தார். பிறகு ஜென்டில்மேன் உட்காருங்கள் என்று கூறி என்னை உட்கார வைத்தார். பின்னர் வக்கீல்களைப் பார்த்து மீண்டும் வழக்கைத் தள்ளிப் போடுவதாகக் கூறினார்.

நமது மிஷனரி எழுதுகிறார்: கோர்ட்டில் வழக்கு எடுக்கப்படுவதற்கு இரு நாட்களுக்கு முன் துஆ செய்தேன். குர்ஆன் ஷரீப் ஓதினேன். ஒரு எண்ணம் வந்தது. குர்ஆனின் தீர்ப்பு என்னவென்று பார்க்க வேண்டும். அதாவது குர்ஆனைத் திறந்தவுடன் முதலில் என்ன வசனம் கண்ணில் படுகிறதோ அது எனக்கு தூதுச் செய்தியாக இருக்கும் என்று நினைத்தவாறு நான் திறந்து பார்த்த போது, எனக்கு இந்த வசனம் கண்ணில் பட்டது.

*(21:70)* يٰنَارُ كُوْنِيْ بَرْدًا وَّسَلٰمًا عَلٰۤى اِبْرٰهِيْمَ ஆறுதல் ஏற்பட்டது. நல்ல தூதுச் செய்தி தான் கிடைத்துள்ளது. சிறிது நேரத்திற்குப் பிறகு தபால் நிலையம் சென்று தபால் வாங்கச் சென்றேன். அதில் எனது கடிதமும் அவருக்கு வந்திருந்தது. அதில் இருந்தது அல்லாஹ் உங்களை எல்லா விஷமங்களிலிருந்தும் பாதுகாத்து வைப்பானாக! நயவஞ்சகர்களின் சதியைத் தோல்வி அடையச் செய்வானாக! ஜமாஅத்தை எல்லா சோதனைகளிலிருந்தும் காப்பானாக! மேன்மேலும் வளர்ச்சியை வழங்குவானாக! இந்தக் கடிதம் பார்த்த பிறகு என் உள்ளத்தில் நிச்சயமாக அல்லாஹ் அருள் செய்வான் என்ற எண்ணம் உறுதியாகப் பதிந்து விட்டது. சில அன்பர்களுக்கும் நான், அல்லாஹ் அருள் செய்ய உள்ளான் என்ற நற்செய்தியைக் கூறினேன்.

கூறுகிறார்: நான் நீதிமன்றத்தில் நுழைந்ததும் வழக்கம் போல் நீதிபதி என்னை அமரச் சொன்னார். வக்கீல்களிடம் பேசிவிட்டு என்னிடம் சொன்னார். நீர் விடுதலை செய்யப்படுகிறீர்கள். போய் உமது வேலையைப் பாரும். உமக்கு எதிரில் எந்த வழக்கும் இல்லை. ஆக, ஈமான் உறுதி இருந்தால் இறைவனது வல்லமையின் மீது நம்பிக்கை இருந்தால் மனிதன் முழுக்க முழுக்க இறைவனையே நோக்கி நிற்கிறான். பிறகு இறைவனும் அடையாளத்தைக் காட்டுகிறான்.

இவையே நமது ஈமானை உறுதிப்படுத்துகின்றன. நமது அமலின் நிலையைச் சரி செய்கிறது. அதே வேளையில் மற்றவர்களின் ஈமான் அதிகரிக்கவும் காரணமாகிறது. ஆகவே இவற்றையே நாம் பெற முயற்சி செய்ய வேண்டும். செயல் சீர்திருத்தத்திற்கான இரண்டாவது அம்சம் ஏற்கனவே குறிப்பிட்டது. அது அறிவின் ஆற்றலாகும். இதுபற்றி நான் மீண்டும் கூறுகிறேன். முதலில் கூறியுள்ளேன். அறியாமையால் சிலவற்றை பெரிய பாவம் என்றும், சிலவற்றை சிறிய பாவம் என்றும் கருதப்படுகிறது. இதன் விளைவு என்னவென்றால், மனிதனால் சிறிய பாவமாக கருதப்பட்டவை அவனது உள்ளத்திலும் மூளையிலும் இடம்பிடித்துக் கொள்கிறது. இது பாவமே அல்ல. சின்ன விஷயம். இது எவ்வளவு சாதாரண பாவம் எனில் இதுபற்றியெல்லாம் கேட்கப்படப் போவதில்லை என்று கருதுகிறான். கடந்த இரு வாரங்களுக்கு முந்தைய குத்பாவில் நான் கவனமூட்டியிருந்தேன். புகலிடம் தேடி விசா கேட்பவர்கள் பொய்யைப் பயன்படுத்துகின்றனர். உண்மையில் அவர்கள் தமது கேஸை கெடுத்துக் கொள்கின்றனர். தமது கேஸை வீணாக்குவதுடன் ஜமாஅத்தின் நற்பெயருக்கும் பங்கம் ஏற்படுத்துகின்றனர்.

ஒருவர் கூறினார்: குத்பாவிற்குப் பிறகு ஒருவர் நேராக வக்கீலிடம் சென்றார். வக்கீல் சாஹிபும் பின்னால் இருந்து குத்பா கேட்டுக் கொண்டிருந்தார். அவர் ஜமாஅத்திற்குச் சேவையும் செய்கிறார். அவர் இந்தக் கேஸை தயார் செய்த போது, இந்த விண்ணப்பதாரருக்காக சில தவறான செய்திகளையும் எழுதியிருந்தார். அவற்றிற்கு உண்மையுடன் எந்தத் தொடர்பும் இல்லை. இது இல்லாமல் கேஸ் நடக்காது என்று வக்கீலை நியமித்தவருக்கு சொல்லப்பட்டு விட்டது. இவ்வாறு தவறாக பொய்யான விஷயங்களையும் சேர்க்க வேண்டாம் என்று ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. அஹ்மதிகளின் மீது இழைக்கப்பட்ட அநீதி சம்பவங்கள் எவ்வளவு அதிகம்! எவ்வளவு தெளிவானவை! முழு உலகிற்கும் தெரியும். எனவே எந்தவொரு வக்கீலின் தந்திரமும் பொய்யும் தேவையில்லை. எனவே பொறுப்பாளர்களும் முரப்பிகளும் மீண்டும் மீண்டும் பொய்யிலிருந்து விலக அறிவுரை கூற வேண்டும். எந்தப்

பாவமும் பெரியதோ சிறியதோ அல்ல. பாவம் பாவம் தான். அதிலிருந்து நாம் தப்பிக்கத்தான் வேண்டும். ஒவ்வொரு பொய்யும் பொய் தான். அந்தப் பொய்யின் ஷிர்க்கிலிருந்து தப்பிக்க வேண்டும். உங்கள் தொடர்பு இறைவனுடன் உறுதியாக இருந்தால் பிறகு கவலைப்பட வேண்டாம். அடையாளங்கள் வெளிப்படும். அதனை மனிதன் பார்க்கிறான். ஆனால் அறிவுரை வழங்குபவர் தனது தரத்தை உயர்ந்ததாக தமது எண்ணத்தின் ஆற்றலை உயர் தகுதியை நோக்கி தேடும் நிலையில் வைத்திருக்க வேண்டும். செயல் ரீதியிலும் சரி அவரது செயலும் அறிவும் ஒன்றுபட்டு இருக்க வேண்டும். பேசுவது ஒன்று, செய்வது ஒன்று என்ற கூட்டத்தில் இருக்கக் கூடாது.

எவ்வாறிருப்பினும், ஜமாஅத்துகளில் மீண்டும் மீண்டும் தர்ஸ்களில் ஈமானின் உறுதியை ஏற்படுத்துதல், செயலின் நிலையில் மேம்பாடு ஏற்படுத்துதல் தொடர்பாக அறிவின் பலவீனத்தை அகற்றுவதற்காக கவனமூட்ட வேண்டும். ஆகவே ஒவ்வொருவரும் தத்தமது வட்டத்தில் பணியைத் தொடங்க வேண்டும். அதன் மூலம் தெளிவான மாற்றம் தென்படும். இக்காலத்தில் அறிவு என்ற பெயரில் பல்வேறு தீமைகளையும் கூட சொல்லித் தருகின்றனர். நமது அமைப்புகள் பிள்ளைகளுக்கும் இளைஞர்களுக்கும் அதை விட அதிகமாக உண்மையை எடுத்துச் சொல்ல வேண்டும். பெற்றோர்களும் தமது நிலைமைகளின் பக்கம் கவனம் செலுத்தி அந்த அறிவுகளின் நஷ்டங்களைக் குறித்து எச்சரிக்க வேண்டும். அவை அறிவு என்ற பெயரால் பிள்ளைகளுக்கு பள்ளிக்கூடங்களில் தரப்படுகின்றன. அவை பெற்றோருக்குத் தெரிந்திருக்க வேண்டும். அதன் மூலமே நீங்கள் உங்களையும் பாதுகாத்து, பிள்ளைகளையும் பாதுகாக்க முடியும். மிகச் சிறிய வயதில் தேவையில்லாத விஷயங்கள் கற்பிக்கப்படுகிறது. நல்லது, கெட்டது பிரித்தறிய வேண்டும் என்பதற்காக கற்றுத் தருவதாக கூறப்படுகிறது. உண்மையில் நல்லது கெட்டது பற்றிய வித்தியாசம் சொல்லித் தரப்படுவதில்லை.

மாறாக பெரும்பாலான பிள்ளைகளின் மனத்தில் சிறு வயதிலேயே தவறான சிந்தனை தான் உருவாகி விடுகிறது. அவர்களுக்கு முன் அவர்களது தாய் தந்தையரின் உதாரணம், சுற்றுச் சூழலில் உதாரணம் இவற்றில் தீமை அதிகமாகவும் நல்லவை குறைவாகவும் உள்ளன. எனவே முரப்பிகள், பொறுப்பாளர்கள், கிளை அமைப்பின் பொறுப்பாளர்கள், பெற்றோர் அனைவரும் இணைந்து கூட்டு முயற்சி செய்ய வேண்டும். தவறான கல்வியின் இடத்தில் சரியான கல்விக்கு ஏற்பாடு செய்யுங்கள். பள்ளிகளின் நடைமுறையை நாம் தடுக்க முடியாது. அதில் நாம் குறுக்கிட முடியாது. அசுத்தம் வெட்கமின்மைக்கான வித்தியாசத்தை எடுத்துக் கூறி குழந்தைகளை நமது பொறுப்பில் எடுத்து தமது வாழ்வின் முன்மாதிரி காட்டி சூழ்நிலையின் தாக்கத்திலிருந்து அவர்களை காப்பாற்ற முடியும். அல்லாஹ் நம்மை நல்ல முறையில் நமது பொறுப்புகளை நிறைவேற்ற வைப்பானாக! தொழுகைக்குப் பிறகு இரு காயிப் ஜனாஸா தொழுகை நடத்துவேன்.

ஒரு ஜனாஸா கண்ணியத்திற்குரிய நவாப் பீபி சாஹிபா மாங்கரூர் ஹாபியாபாத் மாவட்டத்தைச் சார்ந்தவர். 19 ஜனவரி 2014 –ல் இறை நியதிப்படி வஃபாத் ஆனார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன். இவரது தகப்பனார் குடும்பம் அஜினாவாலா செருபுரா மாவட்டம். தாயார் வழியில் மாங்கெட்டுச்சே ஹாபஸிா மாவட்டத்தைச் சேர்ந்தது. இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபியான ஹஸ்ரத் நாஸிர்தீன் மாங்கட் சாவிரியின் தாய்வழி கொள்ளுப் பேத்தியாவார். தூய நல்ல பெண்மணி. அஹ்மதிகளும் அஹ்மதி அல்லாதவர்களும் அவருக்கு கண்ணியம் அளித்தனர். ஜமாஅத்தின் முரப்பியின் மீது பிரிவும் கருணை காட்டுபவர். கிலாஃபத்துடன் ஈடுபாடு உள்ளனர். அவர் பெரும்பாலான பஞ்சாபி நஸம்களை கிலாஃபத்தைப் பற்றி இயற்றியவர். பாடவும் செய்துள்ளார். இவரது நினைவாக 3 மகன்கள் 3 மகள்கள் உள்ளனர். இஹ்ஸானுல்லா மாங்கட் சாஹிப் தற்போது ஜமாஅத் முரப்பி. தற்போது கியானா உடைய முபல்லிக் இன்சார்ஜ் தென் ஆப்பிரிக்கா. நாட்டிற்கு வெளியில் இருப்பதால் தாயாரின் ஜனாஸாவில் கலந்து கொள்ள முடியவில்லை. அல்லாஹ் அவருக்கு பொறுமையையும் தைரியத்யையும் வழங்குவானாக! மர்ஹூமாவின் தகுதியை உயர்த்துவானாக!

இரண்டாவது ஜனாஸா கண்ணியத்திற்குரிய ஷேக் அப்துர் ரஷீது ஷர்மா சாஹிப். ஷிகார்பூர் சிந்தை சார்ந்தவர். 16 ஜனவரி 1914 –ல் தமது 90வது வயதில் வஃபாத் ஆனார். இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபியான ஹஸ்ரத் ஷேக் அப்துல் ரஹீம் ஷர்மா சாஹிப் உடைய மகனாவார். மவ்லவி அப்துல் கரீம் ஷர்மா சாஹிப் இங்கு இருந்தார். அவரது சகோதரர் அல்லாஹ்வின் அருளால் அரை நூற்றாண்டை விட அதிகமான காலம் சிக்கார்பூர் சிந்தில் ஜமாஅத்திற்கு பணியாற்றும் வாய்ப்பு பெற்றிருந்தார். நாடு பிரிவினைக்கு முன் காதியானில் மிர்ஸா ஷரீப் அஹ்மது (ரலி) அவர்களுடைய அலுவலகத்தில் மிகவும் முயன்று பணிசெய்ய வாய்ப்பு பெற்றிருந்தார். பாகிஸ்தான் நிறுவப்பட்ட வேளையில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடைய சில வழிகாட்டல்களை நிறைவேற்றும் வாய்ப்பு பெற்றிருந்தார். முதலில் தொழில் இல்லை. நாடு பிரிவினைக்குப் பிறகு எனது தந்தையார் மிர்ஸா மன்சூர் அஹ்மது உடைய ஆலோசனைக்குப் பிறகு ஷிகார்பூர் சென்றார். அங்கு அவருக்கு

அலுவலகம் ஒதுக்கப்பட்டது. அங்கு அவர்கள் அஹ்மதிகளைத் தேடிக் கண்டுபிடித்து ஜமாஅத்தை நிறுவினார். பிறகு அந்த ஜமாஅத்தின் முதல் தலைவராக இருந்தார். தமது அலுவலகம் இருந்த தோட்டத்தில் அழகிய பள்ளியொன்றைக் கட்டும் வாய்ப்பு பெற்றார். நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் சிந்து மாவட்டத்தின் அமீராக அவரை நியமித்தார்கள். 1982 –ல் அவரது மனைவி வஃபாத் ஆனார்கள். 31 ஆண்டுகள் தைரியமாகவும் பொறுமையாகவும் கழித்தார். இதற்கிடையில் அவரது மகன் ஷேக் முஷஃப்பர் அஹ்மது சாஹிப் 1995 –ல் ஷிகாபூரில் ஷஹீது ஆக்கப்பட்டார். பிறகு 1997–ல் அவரது மூத்த மகன் முபாரக் அஹ்மது ஷர்மாவையும் எதிர்ப்பான சூழ்நிலையின் போது ஷஹீது ஆக்கி விட்டார்கள். இருந்தும் அவரது உறுதியில் எந்த மாற்றமும் இல்லை. இறைவனுக்கு நன்றி செலுத்துபவராகவும் பொறுமையாளராகவுமே இருந்தார். தைரியமும் வீரமும் மிக்கவர். ஒருமுறை இவரது வீடு இருந்த இடத்தில் எதிரியின் ஊர்வலம் ஒன்று நடந்தது. தொழிற்சாலை தாக்கப்பட்டது. அவர் தைரியமாக அவர்களுக்கு எதிராக வெளியில் வந்தார். காவல்துறை நின்று வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தது. இவர் முன்னால் சென்று ஊர்வலத்தை நடத்தி வந்த மவ்லவியைப் பிடித்தார். அதனைப் பார்த்து முழு ஊர்வலமும் கலைந்தோடியது. காவல்துறையும் மீண்டும் மீண்டும் எவ்வாறு இவர்களைக் கலைத்தீர்கள் என்று கேட்டது. அதன் பிறகு இவர் இஸ்லாமாபாத்திற்கு மாறினார். கிலாஃபத்துடன் உறுதியான தொடர்பு இருந்தது. பொருள் தியாகத்திலும் முன்னணியில் நிற்பவர். பெரியோர்கள் சார்பாகவும் முறைப்படி சந்தா கொடுத்து வந்தார். பாகிஸ்தானில் பல பள்ளிவாசல்கள் கட்டுவதற்காக பொருள் தியாகம் செய்தவர். மூஸியாக இருந்தார். முழு வருட சந்தாவையும் வருட ஆரம்பத்திலேயே தந்து விடுவார். அவரது நினைவாக 5 மகன்கள் 5 மகள்கள் உள்ளனர். ஒரு மகள் நைஜீரியாவின் வக்ஃபே ஸிந்தகி டாக்டர் மலக் முத்தஸிர் அஹ்மது சாஹிப். பௌஸியா சாஹிபும் மருத்துவர் தான். கணவன் மனைவி இருவரும் மருத்துவர்கள். நைஜிரியாவில் தொண்டாற்றுகின்றார்கள். இவரது பேரன் கண்ணியத்திற்குரிய சிஹல் முபாரக் ஷர்மா சாஹிப். முபல்லிக் ஆவார். தற்போது பாகிஸ்தான் சதர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா பாரத் ஆக பணியாற்றும் வாய்ப்பு பெற்றுள்ளார். அல்லாஹ் மர்ஹுமின் தகுதியை உயர்த்துவானாக! அவரது பிள்ளைகளுக்கும் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் நல்ல முறையில் தமது பெரியவர்களின் அடியொற்றி நடக்கும் வாய்ப்பினை வழங்குவானாக! விசுவாசத்துடன் இத்தொடர்பை நிலைநிறுத்தும் வாய்ப்பினை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★


**JUMUA KHUTBA**

**HAZRAT KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH Mosque, London.

on **24.01.2014**

Translated by : Muallim M. NIZAMUDEEN Sb.
Typeset by : A. MUHAMMAD NISAR
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456